மரம் நடுவீர் மழைநீர் சேமிப்பீர்

# புதுக்கோட்டை நகராட்சி

## 2022 – 2023 ம் ஆண்டின் நிர்வாக அறிக்கை

புதுக்கோட்டை நகராட்சி

# நிர்வாக அறிக்கை

## 2022 – 2023

## (01–04–2022 முதல் 31–03–2023 வரை)

**அமைப்பும் நிர்வாகமும் :-**

வரலாற்று சிறப்பு மிக்க புதுக்கோட்டை நகராட்சி **1912–**ம் ஆண்டு **3–**ம் நிலை நகராட்சியாக தோற்றுவிக்கப்பட்டு படிப்படியாக உயர்ந்து அரசாணை ( நிலை) எண்.**303,** நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள். 22.03.1988 ம் தேதி முதல் தேர்வு நிலை நகராட்சியாக இயங்கி வருகிறது. இந்நகரம் 180 புதுக்கோட்டை சட்டமன்ற தொகுதியிலும் அமைந்துள்ளது. இது நிலவியல் குறுக்கு கோடு 78-79 ல் அடங்கியுள்ளது. கடல் மட்டத்திற்கு மேல் **87.28** மீ உயரத்தில் உள்ளது.

**எல்லை :-**

புதுக்கோட்டை நகராட்சி ஏற்கனவே 12.95 சதுர கிலோ மீட்டர் பரப்பளவில் 39 வார்டுகளைக்கொண்டதாக இருந்தது. நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அரசாணை எண்.12, நாள்.06.01.2011–ம் தேதிய அரசு உத்தரவின்படி புதுக்கோட்டை பஞ்சாயத்து முழுவதும் நகராட்சிப்பகுதியுடன் இணைக்கப்பட்டது. **25.10.2011** முதல் பஞ்சாயத்து பகுதியை நகராட்சிப்பகுதிகாளக செயல்பட்டு வருகிறது. புதுக்கோட்டை பஞ்சாயத்து பகுதி **9** சதுர கிலோ மீட்டர் பரப்பளவு நகராட்சி **12.95** சதுர கிலோ மீட்டர் பரப்பளவுடன் சேர்க்கப்பட்டு மொத்த 21.95 கிலோ மீட்டர் பரப்பளவு கொண்டதாக நகராட்சி உள்ளது. ஏற்கனவே நகராட்சியில் உள்ள 39 வார்டுகளுடன் பஞ்சாயத்து பகுதிகளை **5** வார்டுகளாக பிரிக்கப்பட்டு நகராட்சியுடன் சேர்த்து மொத்தம் **42** வார்டுகளாக அமைக்கப்பட்டுள்ளது.

**தோற்றம் :-**

புதுக்கோட்டை நகராட்சி **1912–**ம் வருடம் மூன்றாவது நிலை நகராட்சியாக தோற்றுவிக்கப்பட்டு **05–04–1949** ம் தேதிய உள்ளாட்சித்துறை அரசாணை எண்.**738** ல் இரண்டாம் நிலை நகராட்சியாக உயர்த்தப்பட்டது. பின்னர் ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறையின் அரசாணை எண்.**2211**, நாள். **01–11–1963** ல் முதல் நிலை நகராட்சியாக உயர்த்தப்பட்டது. பின்னர் நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர்

வழங்குதுறையின் **22–03–1988** ம் தேதிய அரசாணை எண்.**303** ன்படி தேர்வு நிலை நகராட்சியாக தரம் உயர்த்தப்பட்டு இயங்கி வருகிறது.

**மக்கள் தொகை :-**

| | | |
|---|---|---|
| 1981– ம் ஆண்டு மக்கள் தொகை கணக்கின்படி மக்கள் தொகை | : | 87952 |
| 1991–ம் ஆண்டு மக்கள் தொகை கணக்கின்படி மக்கள் தொகை | : | 98619 |
| 2001–ம் ஆண்டு மக்கள் தொகை கணக்கின்படி மக்கள் தொகை | : | 109217 |
| 2011–ம் ஆண்டின் உத்தேச மக்கள் தொகை | : | **143748** |
| 2011 மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி<br>ஆண்கள் – 72053<br>பெண்கள்– 71693<br>இதரர் – 2 | : | 143748 |

**வார்டு எண்கள் :–**

**பெண் உறுப்பினர்களுக்காக ஒதுக்கப்பட்ட வார்டுகளின் எண்ணிக்கை 21 ஆகும்.**

( வார்டுகள்– **3. 6. 7. 8. 9. 11. 12. 13. 14. 18. 19. 21. 24. 25. 26. 30. 31. 32, ) – 18**

ஆதிதிராவிடர் உறுப்பினர் வார்டு ( பொது) – **28, 42**

ஆதிதிராவிடர் உறுப்பினர் வார்டு ( பெண்கள்) – **32, 33, 37**

பொது – 1, 2, 4, 5, 10, 15, 16, 17, 20, 22, 23, 25, 27, 29, 34, 35, 38, 40, 41

**நகர்மன்றம் :–**

தேர்தல் நடைபெற்ற பின்பு மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட நகர்மன்றத் தலைவர் நகர்மன்ற துணைத்தலைவர் மற்றும் நகர்மன்ற உறுப்பினர்கள் **42** நபர்கள் தேர்வு செய்யப்பட்டு பணிபுரிந்து வருகிறார்.

19.02.2022–ல் தேர்தல் நடைபெற்ற பின்பு **02.03.2022**ம் தேதி முதல் பதவியேற்று தேர்ந்தெடுக்கப்பட்ட **42** வார்டு உறுப்பினர்கள் நிதியாண்டு முழுவதும் நகர்மன்ற உறுப்பினர்கள் பதவி வகித்து வருபவர்கள் விபரம்.

மேலும் 04.03.2022ம் தேதியன்று நகர்மன்ற தலைவர் மற்றும் நகர்மன்ற துணைத்தலைவர் பதவி ஏற்றுள்ளனர்.

| | | |
|---|---|---|
| நகர்மன்றத் தலைவர் | : | திருமதி. செ. திலகவதி ( வார்டு – **25** ) |
| நகர்மன்றத் துணைத்தலைவர் | : | திரு.மு.லியாகத்அலி (வார்டு – **17**) |

| | மன்ற உறுப்பினர்கள் | | |
|---|---|---|---|
| வார்டு எண் | திருவாளர்கள் | வார்டு எண் | திருவாளர்கள் |
| 1 | திரு. ரா. பழனிவேலு | 22 | திரு. வே. ராஜேந்திரன் |
| 2 | திரு. சி. மதியழகன் | 23 | திரு. தி. குமரகுருபரன் |
| 3 | திருமதி. செ. கார்த்திகைசெல்வி | 24 | திருமதி. க. அனுஹரினா |
| 4 | திரு. ஜா. முகமது பர்வேஸ் | 26 | திருமதி. க. லதா |
| 5 | திரு. செ. அடைக்கலம் | 27 | திரு. சா. மூர்த்தி |
| 6 | திருமதி. மா. சத்யா | 28 | திரு. சு. எட்வர்ட் சந்தோசநாதன் |
| 7 | திருமதி. எஸ்.என்.எம். இராஜாத்தி | 29 | திரு. சுப. சரவணன் |
| 8 | திருமதி. அ. அனுராதா | 30 | திருமதி. ஆர். லதா |
| 9 | திருமதி. டி. செந்தாமரை | 31 | திருமதி. ப. சுமதி |
| 10 | திரு. மை. பால்ராஜ் | 32 | திருமதி. கு. ஜெயா |
| 11 | திருமதி. சூ. அன்புமேரி | 33 | திருமதி. ரா. ராஜேஸ்வரி |
| 12 | திருமதி. அ. செந்தில்மதி | 34 | திரு. ஜே. ராஜாமுகமது |
| 13 | திருமதி. அ. அமுதா | 35 | திரு. மு. ஜாகிர் உசேன் |
| 14 | திருமதி. பி. காந்திமதி | 36 | திருமதி. சா. வளர்மதி |
| 15 | திரு. ரெ. காசிலிங்கம் | 37 | திருமதி. ம. தெய்வாணை |
| 16 | திரு. சு. அப்துல்ரஹ்மான் | 38 | திரு. மு. காதர்கனி |
| 18 | திருமதி. நா. பாரதி | 39 | திருமதி. பெ. ராஜேஸ்வரி |
| 19 | திருமதி. ரா. ராஜேஸ்வரி | 40 | திரு. சு. செந்தில்குமார் |
| 20 | திரு. ஜெ. ரமேஷ்பாபு | 41 | திரு. க. பாண்டியன் |
| 21 | திருமதி. நி. மெகர்பானு | 42 | திரு. க. கவிவேந்தன் |

நகர்மன்ற கூட்டங்கள் :–

| 01.04.2022 முதல் 31.03.2023 வரை | |
|---|---|
| மொத்த கூட்டம் | 1 |
| இயல்புக்கூட்டம் | 1 |
| அவசரக்கூட்டம் | 0 |
| மொத்த பொருட்கள் (மார்ச் 2022 மட்டும்) | 21 |
| முடிக்கப்பட்ட பொருட்கள்<br>( மே 2021 முதல் ஜனவரி 2022 வரை) | 572 |
| ஒத்திவைக்கப்பட்ட பொருட்கள் | 0 |

**1. நியமனக்குழு உறுப்பினர்**

திருமதி. சா. வளர்மதி **31.03.2022** முதல் நியமனக்குழு உறுப்பினராக உள்ளார்.

**2 . ஒப்பந்தக்குழு உறுப்பினர்**

திரு. சு. எட்வர்ட் சந்தோசநாதன் **31.03.2022** முதல் ஒப்பந்தக்குழு உறுப்பினராக உள்ளார்.

**3 . வரிமேல்முறையீட்டுக்குழு உறுப்பினர்கள்**

திருவாளர்கள் **1.** திருமதி. பெ. ராஜேஸ்வரி **2.** திரு. ஜே. ரமேஷ்பாபு **3.** திருமதி. ஆர். லதா **4.** திரு.ஜே. அடைக்கலம் 31.03.2022 முதல் வரிமேல்முறையீட்டுக்குழு உறுப்பினராக உள்ளார்கள்.

**<u>உள்ளூர் திட்டக்குழு உறுப்பினர்கள் – இல்லை</u>**

2021–2022ம் ஆண்டில் நகர்மன்றத்தலைவர், துணைத்தலைவர் மற்றும் உறுப்பினர்களுக்கு பயணப்படி தலைப்பின் கீழ் செலவினம் ஏதும் மேற்கொள்ளப்படவில்லை.

நகர்மன்றத் துணைத்தலைவர் அவர்களுக்கு அதிகார பங்கீடு ஏதும் தலைவரால் கொடுக்கப்படவில்லை. மேலும், நகர்மன்றத் தலைவர் மற்றும் நகர்மன்றத் துணைத்தலைவர் ஆகியோர்கள் இல்லாதபோது செயல்பட உறுப்பினர் எவரும் தேர்ந்தெடுக்கப்படவில்லை.

இந்நகர்மன்றக் கூட்டங்கள் அனைத்தும் முறையாக நடைபெற்று வருகிறது. உறுப்பினர்களின் வருகை 100 சதவிகிதம்.

| வ.எண் | குழுக்கூட்ட விபரம் | கூட்ட எண்ணிக்கை | முடிவு செய்த பொருட்கள் |
|---|---|---|---|
| **1.** | ஒப்பந்தக்குழு | – | – |
| **2.** | நியமனக்குழு | – | – |
| **3.** | உள்ளூர் திட்டக்குழுமம் | | |
| **4.** | வரி மேல்முறையீட்டுக்குழு | – | – |

நடப்பு ஆண்டில் ஒப்பந்தக்குழு கூட்டம் ஏதும் நடைபெறவில்லை.

| **ஆணையர் மற்றும் அலுவலர்கள்** | | | |
|---|---|---|---|
| **ஆணையாளர்** | | | |
| 1. | திருமதி. ப. கிருஷ்ணவேணி, ஆணையாளர் (பொ) | 01.04.2021 | 21.07.2021 |
| 2. | திரு. சே. நாகராஜன், எம்,ஏ., | 01.04.2022 | 31.03.2023(04.05.2023) |
| **நகராட்சி பொறியாளர்** | | | |
| 1. | திரு. ஜீவா. சுப்ரமணியன், பி.இ.எம்.பி.ஏ., | 01.04.2021 | 02.08.2021 |
| 2. | திரு. பி. சேகரன், பி.இ., | 01.04.2023 | 31.03.2023(18.05.2023) |
| **நகர்நல அலுவலர்** | | | |
| 1. | டாக்டர். K. பூபதி , M.B.B.S., | 01.04.2021 | 31.07.2021 |
| 2. | திரு.சே.நாகராஜன்,எம்,ஏ., ஆணையாளர் மற்றும் நகர்நல அலுவலர் (பொ) | 01.08.2021 | 21.01.2022 |
| 3. | டாக்டர். M. கார்த்திகேயன், M.B.B.S., | 22.01.2022 | 31.03.2022 |
| **நகரமைப்பு அலுவலர்** | | | |
| 1. | திருமதி. கே. மாலதி, B.E., , | 01.04.2021 | 31.07.2021 |
| 2. | திரு. எஸ். ஜெய்சங்கர், B.E., M,Tech. M.B.A., (பொ) | 01.08.2021 | 31.03.2022 |
| **மேலாளர்** | | | |
| 1. | திருமதி. ப. கிருஷ்ணவேணி , மேலாளர் | 01.04.2020 | 28.11.2021 |
| 2. | திருமதி. V. விஜயா ஸ்ரீ , மேலாளர் (பொ) | 01.04.2022 | 31.03.2023 |
| **கணக்கர்** | | | |
| 1. | திருமதி V. விஜயா ஸ்ரீ | 01.04.2021 | 12.09.2021 |
| 2. | திரு. சீ. ரவிச்சந்திரன் | 01.04.2022 | 31.03.2023 |

| **வருவாய் அலுவலர்** | | | |
|---|---|---|---|
| 1. | திரு **J**. காந்தி | 01.04.2021 | 05.09.2021 |
| 2. | திருமதி. வே. விஜயாஸ்ரீ | 01.04.2022 | 31.03.2023 |

| பொதுப்பிரிவு : – | | | |
|---|---|---|---|
| 1. | மேலாளர் | 1 | – |
| 2. | கணக்கர் | 1 | – |
| 3. | உதவியாளர்கள் | 3 | 1 காலிப்பணியிடம் |
| 4. | இளநிலை உதவியாளர்கள் | 8 | – |
| 5. | தட்டச்சர்கள் | 3 | 3 காலிப்பணியிடம் |
| 6. | உதவி திட்ட அமைப்பாளர் | 1 | – |
| 7. | கணினி உள்ளீடு செய்பவர் | 1 | 1 காலிப்பணியிடம் |
| 8. | பதிவறை எழுத்தர் | 2 | – |
| 9. | அலுவலக உதவியாளர் | 4 | – |

**மேலாண்மை :-**

அறிக்கையாண்டில் அனைத்து பிரிவு பணியாளர்களுக்கு ஏற்பட்ட ஊதியம் செலவு ரூ. **13,40,073,70/-** சென்ற ஆண்டில் ரூ.**9,41,91,919/-** செலவு ஆகியுள்ளது. நகராட்சி சொந்த கட்டிடத்தில் இயங்கிவருகிறது.

நகராட்சி வழக்குகள் அனைத்தும் அப்போதைக்கப்போது நகராட்சி வழக்கறிஞர் மற்றும் அரசு வழக்கறிஞரிடம் ஒப்படைக்கப்பட்டு வழக்குகள் நடத்தப்பட்டு வருகின்றது. அறிக்கையாண்டில் தொடரப்பட்ட வழக்குகள் முடிவானவற்றின் விபரம் கொடுக்கப்பட்டுள்ளது.

| **2022–2023 ல் நகராட்சியின் வழக்குகள் விபரம்** | | | | |
|---|---|---|---|---|
| ஆரம்ப இருப்பு | வழக்கு ஏற்கப்பட்டவை | மொத்தம் | முடிந்தவை | நிலுவையாக உள்ளவை |
| **16** | **48** | **64** | **14** | **50** |

**கொடிநாள் வசூல் 2022–2023: –**

ஒவ்வொரு ஆண்டும் டிசம்பர் திங்கள் 7ம் நாள் கொடி நாள் தினமாக கொண்டாடப்படுவதை முன்னிட்டு முன்னாள் இராணுவத்தினர் நலனுக்காக 2022 – 2023 ஆண்டின் இலக்காக இந்நகராட்சிக்கு ரூ.2,50,000/– வசூல் செய்ய குறியீடு நிர்ணயம் செய்யப்பட்டது.

**நிர்வாகம் : –**

அவ்வப்போது பிறப்பிக்கப்படும் அரசாணையின்படி விதிமுறைகள் நடைமுறைப்படுத்தப்பட்டு நிர்வாகம் சீராக நடைபெற்று வருகின்றது. ஊழியர்களுக்கு அரசால் வழங்கப்படும் சலுகைகளை உடனுக்குடன் நிறைவேற்றப்பட்டு வருகின்றது.

சீருடை பெறத்தகுதியுடைய கடை நிலை ஊழியர்கள், ஓட்டுநர்கள், அலுவலக உதவியாளர்கள், துப்புரவு பணிமேற்பார்வையாளர்கள், சுகாதாரப்பிரிவு நகர சுத்தி தொழிலாளர்கள் மற்றும் மகப்பேறு ஆயாக்களுக்கும் இரண்டு செட் சீருடைகள் வழங்கப்பட்டது. சுகாதாரப் பணியில் ஈடுபடும் துப்புரவு பணியாளர்களுக்கு சுகாதார சாதனங்கள் வழங்கப்பட்டன.

**தகவல் மையம் : –**

பொதுமக்கள் நலனை முன்னிட்டு 02.08.1997ம் நாள் முதல் தகவல் மையம் ஒன்று ஏற்படுத்தப்பட்டு தொடர்ந்து பராமரிக்கப்பட்டு வருகிறது. இதன் மூலம் விண்ணப்பங்கள் பெறப்பட்டு காலதாமதம் தவிர்க்கப்பட்டு பொதுமக்களின் திருப்தியடையும் வகையில் பணிகள் உடனுக்குடன் நிறைவேற்றப்பட்டு வரப்படுகிறது.

இந்நகராட்சிக்கு வரும் கடிதங்கள் பொதுமக்களிடமிருந்து வரும் விண்ணப்பங்கள் மீது கீழ்கண்டுள்ளவாறு மக்கள் சாசனத்தின் அடிப்படையில் நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

| | | |
|---|---|---|
| 1. | வரிகுறைப்பு விண்ணப்பங்கள் மீது முடிவு செய்தல் | 30 நாட்கள் |
| 2 | சொத்துவரி கேட்பு பதிவேட்டில் வீட்டுவரி நகல் | 30 நாட்கள் |
| 3. | பிறப்பு, இறப்பு நகல் வழங்குதல் | 3 நாட்கள் |
| 4. | வீட்டிற்கு குடிநீர் இணைப்பு வழங்குதல் | 7 நாட்கள் |
| 5. | கட்டிட அனுமதி விண்ணப்பத்தின் மீது நடவடிக்கை எடுத்து அனுமதி வழங்கல். | 30 நாட்கள் |
| 6. | அச்ச அருவருப்பு தக்க தொழில்கள் உரிமம் வழங்குதல் | 30 நாட்கள் |
| 7. | சொத்துவரி பெயர்மாற்றம் செய்தல் | 15 நாட்கள் |
| 8 | குடிநீர் இணைப்பு பெயர் மாற்றம் செய்தல் | 15 நாட்கள் |

| பொறியியல் பிரிவு | | | |
|---|---|---|---|
| சாலை பராமரிப்பு, தெருவிளக்கு பராமரிப்பு நீரளிப்பு பணியில் கீழ்க்கண்டவர்கள் பணியாற்றுகிறார்கள் | | | |
| **வ.எண்** | **பணி விவரம்** | **பணிபுரிபவர்கள்** | **காலியிடம்** |
| 1. | நகராட்சி பொறியாளர் நிலை – 2 | 1 | – |
| 2. | இளநிலை பொறியாளர் | 1 | – |
| 3. | பொதுப்பணிமேற்பார்வையாளர் | 1 | – |
| 4. | படவரைவாளர் | 1 | – |
| 5. | பணி ஆய்வர் | 2 | – |
| 6. | குழாய் பொருத்துனர் | 2 | – |
| 7. | குழாய் திறப்பாளர் | 2 | 1 |
| 8. | மின்கம்பியாளர் – நிலை 2 | 2 | 3 |
| 9. | மின் கம்பி உதவியாளர் | 1 | 2 |
| 10. | குடிநீர் லாரி மற்றும் ரோலர் ஒட்டுநர் | 8 | 3 |
| 11. | ஈப்பு ஓட்டுநர் | 2 | – |
| 12. | கேங் மஸ்தூர் | 7 | 11 |
| 13. | லாரி கிளினர் | 1 | – |
| 14. | நீர் நிலையக்காவலர் | 3 | 8 |
| 15. | அலுவலக உதவியாளர் | 1 | – |
| 16. | இரவுக்காவலர் | 1 | – |
| | | **36** | **28** |

**பாதாள சாக்கடைத் திட்டம் : –**

இந்நகராட்சி பகுதியில் பாதாள சாக்கடை திட்டம் கீழ்கண்டவாறு மான்யம் மற்றும் கடன் பெற்று தமிழ்நாடு குடிநீர் வாரியம் மூலம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. அரசாணை எண்.43, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்குதுறை நாள். 07.06.2006–ன்படி பாதாள சாக்கடை திட்டம் செயல்படுத்திடவும் நிதி ஒதுக்கீடு கீழ்கண்டவாறு செய்து உத்தரவிடப்பட்டுள்ளது.

| | | | |
|---|---|---|---|
| 1. | TNUDP III Grand | : | Rs. 9.65 Crores |
| 2. | TNUDP III Loan | : | Rs. 12.05 Crores |
| 3. | Municipal & Public Contribution | : | Rs. 10.46 Crores |
| | Total | : | Rs. 32.16 Crores |

மேலும் மேற்படி திட்டத்திற்கு அரசாணை நாள்.**31.12.2009**–ல் ரூ.**49.03** கோடிக்கு திருத்திய அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

| | | | |
|---|---|---|---|
| 1. | TNUDP III Grand | : | Rs. 24.35 Crore |
| 2. | TNUDP III Loan | : | Rs. 12.05 Crore |
| 3. | Municipal & Public Contribution | : | Rs. 11.76 Crore |
| 4. | Interest | : | Rs. 0.87 Crore |
| | **Total** | **:** | **Rs. 49.03 Crore** |

மேற்படி பாதாள சாக்கடை திட்டத்தினை நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை கடிதம் ( நிலை) எண்.**41**, நாள்.**21.03.2007**–ன்படி தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மூலம் பணியினை செய்ய உத்தரவிடப்பட்டுள்ளது. அதன்படி மேற்படி வாரியத்தால் பணிகள் மேற்கொள்ளப்பட்டு **31.03.2013** வரை குழாய் பதிக்கும் பணிக்கள் மற்றும் ஆள்நுழைவு தொட்டி அமைக்கும் பணியும் முடிவுற்றுள்ளது. பணி முன்னேற்றத்தில் உள்ளது. இதுவரை ரூ.**37.43** கோடி செலவிடப்பட்டுள்ளது.

| **வாகன பராமரிப்பு : –** | | | |
|---|---|---|---|
| **1.** | ஈப்புகள் | : | 4 |
| **2.** | குடிநீர் லாரி | : | 0 |

## கலைஞர் நகர்புற மேம்பாட்டு திட்டம் – 2022–2023

கலைஞர் நகர்புற மேம்பாட்டுத் திட்டம் (KNMT) 2022–2023 இன் கீழ் மண் சாலைகளை தார் சாலைகளாக மாற்றும் பணிக்கு ரூ.321.00 இலட்சம் மதிப்பீட்டில் மூன்று பணிகள் மேற்கொள்ளபட்டு நடைபெற்று வருகிறது.

## NSMT திட்டம் – 2022–2023

நகர்புற சாலைகள் மேம்பாட்டுத் திட்டம் 2022–2023 இன் கீழ் பழுது அடைந்த தார் சாலைகளை புதிப்பிக்கும் பணிக்கு ரூ.190.00 இலட்சம் மதிப்பீட்டில் ஒரு பணிகள் மேற்கொள்ளபட்டு நடைபெற்று வருகிறது.

# 15-வது நிதி குழு திட்டம் – 2022–2023

15–வது நிதி குழு திட்டம் 2022–2023 இன் கீழ் தார் சாலைகளை மேம்பாட்டு பணிக்கு ரூ.103.00 இலட்சம் மதிப்பீட்டீல் மூன்று பணிகள் மேற்கொள்ளபட்டு நடைபெற்று வருகிறது.

## கலைஞர் நகர்புற மேம்பாட்டு திட்டம் (KNMT) 2022–2023 குளங்கள் மேம்பாடு

| வ. எண் | பணிகளின் விவரம் | மதிப்பீடு ரூபாய் லட்சதில் |
|---|---|---|
| 1 | புதுக்கோட்டை நகராட்சிக்கு செந்தமான ராஜாக்குளம் மேம்பாடு | 42.00 |
| 2 | புதுக்கோட்டை நகராட்சிக்கு செந்தமான அய்யர்குளம் மேம்பாடு | 37.00 |
| 3 | புதுக்கோட்டை நகராட்சிக்கு செந்தமான பிள்ளளையார்குளம் மேம்பாடு | 27.00 |
| 4 | புதுக்கோட்டை நகராட்சிக்கு செந்தமான பழனியான்டிஊரனி மேம்பாடு | 29.00 |

## அம்ருத் 2.0 திட்டம் 2022–2023 குளங்கள் மேம்பாடு

| வ. எண் | பணிகளின் விவரம் | மதிப்பீடு ரூபாய் லட்சதில் |
|---|---|---|
| 1 | புதுக்கோட்டை நகராட்சிக்கு செந்தமான குமுந்தன்குளம் மேம்பாடு | 63.00 |
| 2 | புதுக்கோட்டை நகராட்சிக்கு செந்தமான அம்பேத்கார்குளம் மேம்பாடு | 112.25 |

## கலைஞர் நகர்புற மேம்பாட்டு திட்டம் (KNMT) 2022–2023 பூங்கா மேம்பாடு

| வ. எண் | பணிகளின் விவரம் | மதிப்பீடு ரூபாய் லட்சதில் |
|---|---|---|
| 1 | வார்டு எண் 36–ல் உள்ள முத்து நகர் பூங்கா மேம்பாடு செய்தல் | **54.00** |
| 2 | வார்டு எண் 42–ல் உள்ள KLKS பூங்கா மேம்பாடு செய்தல் | **26.00** |

## KNMT -2022-23 MODERN LPG CREMATORIUM

| வ. எண் | பணிகளின் விவரம் | மதிப்பீடு ரூபாய் லட்சதில் |
|---|---|---|
| **1** | Construction of Modern LPG Crematorium at Sengaithoppu Road Burial Ground, Survey No.158, in Pudukkottai Municipality. Tender Recieved | 141.00 |

| | குளங்கள் | |
|---|---|---|
| 1. | டாக்டர் அம்பேத்கர் குளம் காந்தி நகர் | |
| 2. | பல்லவன் குளம் | |
| 3. | வெங்கப்பன் ஊரணி | |
| 4. | பழனியாண்டி ஊரணி | |
| 5. | பொன்னப்பன் குளம் | |
| 6. | இரட்டைக்குளம், திருக்கோகர்ணம் | |
| 7. | நத்தம்பள்ளம், மச்சுவாடி | |
| 8. | சேர்வராயன் ஊரணி | |
| 9. | பேரான்குளம் | |
| 10. | மாப்பிள்ளையார் குளம் | |
| 11. | கீழ நைனாரி குளம் | |
| 12. | வத்தம்பள்ளம் குளம் | |
| 13. | சுப்பையா ஊரணி, சாந்தநாதபுரம் | |
| 14. | ராஜாகுளம் | |
| 15. | அக்கச்சியாகுளம் | |
| 16. | மேல நைனாரி | |
| 17. | பெரிய குளம் | |
| 18. | காந்திபூங்கா குளம் | |
| 19. | குமுந்தான்குளம் | |
| 20. | பிள்ளையார்குளம் | |
| 21. | அடப்பன்குளம் | |
| 22. | தானப்பிள்ளை ஊரணி | |
| 23. | அய்யர் குளம் | |
| 24. | புதுக்குளம் | |
| 25. | காக்காச்சி ஊரணி | |
| 26. | மாங்குளம் | |
| 27. | பாறை குளம் | |
| 28. | புது அரண்மனை குளம் | |

| | | |
|---|---|---|
| 29. | இப்ராம்சா குளம் | |
| 30. | அவுக்குராஜா குளம் | |
| 31. | செட்டி ஊரணி | |
| 32. | ஆலங்குளம் | |
| 33. | பொன்னப்பன் ஊரணி | |
| 34. | தேவகுளம் | |
| 35. | குன்னன்குளம் | |
| 36. | உய்யங்கொண்டான் குளம் | |

## கல்வி துவக்கப்பள்ளி
## கல்வி வசதி

நகராட்சி எல்லைக்குள் அரசினரால் அங்கீகரிக்கப்பட்ட தனியார் பள்ளிகள் கீழ்கண்ட விபரப்படி இயங்கி வருகிறது. நகராட்சி பள்ளிகள் தமிழ்நாடு அரசு கல்வித்துறையில் நடத்தப்பட்டுவருகிறது.

| வ. எண் | பள்ளியின் விபரம் | அரசுப்பள்ளி | நகராட்சி பள்ளி | தனியார் பள்ளி | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| 1. | ஆரம்பப்பள்ளி | 3 | 10 | 5 | |
| 2. | நடுநிலைப்பள்ளி | 7 | 8 | 4 | |
| 3. | உயர்நிலைப்பள்ளி | 3 | 4 | 2 | |
| 4. | மேல்நிலைப்பள்ளி | 4 | - | 2 | |
| | | 17 | 22 | 13 | |

## IV – பொது சுகாதாரம்

### தடுப்பு முறை மருந்துகளும், அமைப்பு பணியாளர்களும்

| | | | |
|---|---|---|---|
| 1. | துப்புரவு அலுவலர் | : | 1 |
| 2. | துப்புரவு ஆய்வாளர் | : | 4<br>2 தற்போது பணிபுரிபவர்கள்<br>2 காலி பணியிடம் |
| 3. | ஓட்டுநர் | : | 9<br>9 தற்போது பணிபுரிபவர்கள் |
| 4. | தூய்மை பணிமேற்பார்வையாளர் | : | 7 |
| 5. | அலுவலக உதவியாளர் | : | 1 |
| 6. | களப்பணி உதவியாளர் | : | 1 |
| 7. | தூய்மைப்பணியாளர்கள்<br>(31.03.2023) | : | 358<br>160 தற்போது பணிபுரிபவர்கள்<br>198 காலி பணியிடம் |

பொது மக்களின் நலனை கருத்தில் கொண்டு நகர்பகுதியை 9 பகுதிகளாக பிரிக்கப்பட்டு 4 துப்புரவு ஆய்வாளர்கள் கண்காணிப்பில் பொது சுகாதாரப்பணிகள் நிறைவேற்றப்படுகிறது.

இந்நகராட்சியில் பணிபுரியும் துப்புரவு ஆய்வாளர்களில் கலவை உரத்தயாரிப்பு பயிற்சிப் பெற்றவர்கள் எவரும் இல்லை. நகராட்சி துப்புரவு ஆய்வாளர்கள் முறைப்படி அப்போதைக்கப்போது பிறப்பு, இறப்பு பதிவுகள் பதிவு செய்து வருகிறார்கள்.

**<u>தடுப்பு ஊசி திட்டம்</u> :-**

| வ. எண் | தடுப்பு ஊசி | குறியீடு | முதல் தடவை | 2–வது தடைவ | 3–வது தடவை | சாதனை |
|---|---|---|---|---|---|---|
| 1. | ஐந்தடுப்பு ஊசி | 1706 | 1706 | 1705 | 1701 | 96.5% |
| 2. | போலியோ சொட்டு மருந்தகம் | 1706 | 1706 | - | - | 100% |
| 3. | தட்டம்மை தடுப்பூசி | 1706 | 1701 | - | - | 97.2% |
| 4. | காசநோய் தடுப்பு ஊசி | 1706 | 1706 | - | - | 98.3% |
| 5. | இசிவு நோய் தடுப்பு ஊசி ( 10 வயது ) | 2835 | 1825 | - | - | 99.3% |
| 6. | தொண்டை அடைப்பான் இரண ஜன்னி வயது 5–6 | 2155 | 2150 | - | - | 96% |
| 7. | தடுப்பு ஊசி (16 வயது) | 2815 | 2810 | - | - | 83.4% |
| 8. | டி.டி.எம்.எம் இரண ஜன்னி தடுப்பு ஊசி கர்ப்பிணி தாய்மார்களுக்கு | 1907 | 1907 | - | - | 100% |
| 9. | இரத்த சோகை மாத்திரைகள் குழந்தைகள் 1–12 வருடம் (F.S.T.Small) | 19935 | 19830 | - | - | 83.5% |
| 10 | இரத்த சோகை மாத்திரைகள் கர்ப்பிணித் தாய்மார்கள் | 950 | 950 | - | - | 100% |
| 11. | வைட்டமின் ஏ கரைசல் | 13612 | 13612 | 13612 | - | 100% |
| 12. | குடும்ப நலத்திட்டம் அறுவை சிகிச்சை | 520 | 495 | - | - | 94.7% |
| 13. | குடும்ப நலத்திட்டம் கருத்தடை வளையம் | 550 | 535 | - | - | 97% |

**குடும்ப நலத்திட்டம் குறியீடும் அதன் சாதனைகளும் 2022–2023 ஆம் ஆண்டு சாதனை விபரங்கள்**

| விபரம் | குறியீடு | சாதனை | சதவீதம் |
|---|---|---|---|
| அறுவை சிகிச்சை | 520 | 495 | 94% |
| கருத்தடை வளையம் | 550 | 535 | 97.5% |

அறிக்கையாண்டில் குடும்ப நலத்திட்டம் சம்மந்தமாக நகராட்சி பொது நலப்பிரிவு பணியாளர்கள் மூலம் வீடு வீடாக பிரசாரம் செய்யப்பட்டது.

2022–2023 ஆம் ஆண்டு குறியீடு 520 குடும்ப கட்டுபாடு 495 பேர்களுக்கு அறுவை சிகிச்சை செய்யப்பட்டது.

## பிறப்பு / இறப்பு விகிதமும் தாய்சேய் நலமும்

அறிக்கையாண்டில் **8** தாய்சேய் நல விடுதிகள் இயங்கி வருகின்றது. **4** மகப்பேறு உதவியாளர்கள், **4** ஆயாக்கள் பணி செய்கின்றனர். மேற்படி பணியாளர்கள் பணியை நகராட்சி நகர்நல அலுவலர் அவர்களால் மேற்பார்வையிட்டு வருகிறார். மகப்பேறு உதவியாளர்கள் கர்ப்பிணிகள், இளம் குழந்தை உள்ள தாய்மார்கள், குழந்தைகள் முதலானோர்களை பார்வையிட்டு வேண்டிய ஆலோசனை வழங்கி வருகிறார்கள். தாய்சேய் நலவிடுதியில் சிகிச்சை பார்க்க இயலாத தாய்மார்கள் அரசினர் மருத்துவமனைக்கு அனுப்பிவைக்கப்படுகிறார்கள்.

| **பிறப்பு மற்றும் இறப்புகளின் விகிதம்** | | | |
|---|---|---|---|
| வருடம் | இனம் | மொத்தம் பதிவானது | விகிதம் |
| 2022 - 2023 | பிறப்பு | 2922 | |
| | இறப்பு | 870 | |

நகரில் எட்டு இடங்களில் அதாவது 1. காந்திநகர், 2. காமராஜபுரம், 3. மச்சுவாடி 4. மேல 5ம் வீதி, 5, திருவப்பூர் பெரிய தெரு, 6. திருவள்ளுவர் நகர், 7. அடப்பன்வயல், 8.கூடல் நகர் ஆகிய இடங்களில் தாய்சேய் நலவிடுதிகள் செயல்பட்டு வருகிறது. தாய்சேய் பணியாளர்களுக்கு நடப்பு ஆண்டில் செலவு ரூ.6748920/– சென்ற ஆண்டு செலவு ரூ. 38,00,781 /–ஆக இருந்தது.

| | |
|---|---|
| 2021 –2022 கருத்தரிப்பு பெண்களை பார்வையிட்டது | 1907 |
| 2020– 2021 பிரசவித்த பெண்களை பார்வையிட்டது | 1895 |
| பிரசவம் பார்த்தது | – |
| குழந்தைகளின் இறப்பு எண்ணிக்கை | – |
| தாய்மார்களின் இறப்பு எண்ணிக்கை | – |

## கழிவுநீர் தொட்டி சுத்தம் செய்தல் :–

மல அறை நச்சுத் தொட்டி சுத்தம் செய்ய கழிவுநீர் லாரி நகராட்சி மூலம் வாடகைக்கு விடப்பட்டு வருகிறது. அதற்கு கீழ்கண்டவாறு கட்டணம் வசூல் செய்யப்படுகிறது.

| வ.எண் | விபரம் | ரூபாய் |
|---|---|---|
| 1. | நகர் எல்லைக்கு ஒரு நடைக்கு | 1000/– |
| 2. | நகர் எல்லைக்கு அப்பால் ஒரு நடைக்கு | 1000/– |

| | | |
|---|---|---|
| 3. | நகர் எல்லைக்கு அப்பால் ஒரு கிலோ மீட்டருக்கு | 15/– |
| 4. | அறிக்கையாண்டில் இதன் மூலம் வருவாய் | இல்லை |
| | ஏனெனில் தற்போது நகராட்சியில் பாதாள சாக்கடை திட்டம் செயல்பட்டு வருவதால் வீடுகளில் கழிவுநீர் சேகரிக்கும் தொட்டி இல்லை. பாதாள சாக்கடை திட்டம் மூலம் தெருக்களில் குழாய் பதிக்கப்பட்டு வீடுகளிலிருந்து வரும் கழிவுநீர் அகற்றப்பட்டு வருகிறது. | |

**பொது :-**

நகராட்சியால் அரசினர் மருத்துவமனையில் ஒரு தொற்றுநோய் பிரிவு பராமரிக்கப்பட்டு வருகிறது. அதற்கு இரண்டு தூய்மை பணியாளர்கள் நியமனம் செய்யப்பட்டுள்ளனர்.

**பன்றி பிடித்தல் விபரம் :-**

2022 –2023 ம் நடப்பு ஆண்டில் பன்றிகள் பிடித்து அப்புறப்படுத்தப்பட்டது.

**மாடுகள் பிடித்தல் :-**

சாலைகளில் போக்குவரத்திற்கும், பொதுமக்களுக்கும் இடையூறு விளைவிக்கும் வகையில் அலைந்து திரியும் மாடுகளை பிடித்து உரிமையாளர்களிடம் அபராதம் ரூ.14,350/– விதிக்கப்படுகிறது.

**தொழு நோய் :-**

இந்நோய் சிலருக்கு ஏற்பட்டுள்ளது. இந்நோய் தடுப்பதற்கு நடவடிக்கை நகராட்சியால் கையாளப்படவில்லை. ஆனால், நகராட்சி எல்லைக்கருகில் தஞ்சாவூர் சாலையில் அரசினரால் பிச்சைக்காரர்கள் மறுவாழ்வு இல்லத்தில் சிகிக்சை அளிக்கப்பட்டு வருகிறது. மேலும் அரசாங்க மருத்துவமனையில் தடுப்பு முறை சிகிச்சை அளிக்கப்படுகிறது.

| | |
|---|---|
| நரம்பு சிலந்தி நோய் | அறிக்கையாண்டில் இந்த நோயினால் யாரும் பாதிக்கப்படவில்லை. நகராட்சி எல்லைக்குள் இந்நோய் யாருக்கும் ஏற்படவில்லை. |
| பிளேக் | |
| அம்மை | |

**துப்புரவு :-**

நகராட்சி திடக்கழிவு மேலாண்மை விதிகளின்படி மக்கும் குப்பை, மக்காத குப்பை என தரம் பிரிக்கப்பட்டு 42 வார்டுகளிலும் தள்ளுவண்டிகள் மூலம் பெறப்பட்டு வருகிறது. அனைத்து வார்டுகளிலும் வீடுதோறும் சென்று தள்ளுவண்டிகளில் குப்பை வாங்கப்பட்டு வருகிறது. நகராட்சியில் துப்புரவு பணிக்கு கீழ்கண்டவாறு வாகனங்கள் பயன்படுத்தப்பட்டு வருகிறது.

| வாகனங்கள் விபரம் | சேகரிக்ககூடிய குப்பை மற்றும் திடக்கழிவு அளவு ( டன் கணக்கில் ) |
|---|---|
| டிப்பர் லாரி – 4 | 56.14 டன் |
| கழிவுநீர் அகற்றும் ஊர்தி – 0 | |
| டம்பர் பிளேசர் – 0 | |
| காம்பாக்டர் – 2 | |
| இலகு ரக வாகனம் (LCV மினி டாடா ஏசி – 11) | |
| பேட்டரியால் இயங்கும் தானியங்கி வாகனம் ( BOV மினி டாடா ஏசி – 012-17 நவம்பர் ) | |
| கிட்டாச்சி (செயின்டோசர் – 1, மினி டோசர் 1) | |
| JCB - 1 | |
| ஜெட் ராய்டு சிறியது – 2 | |
| ஜெட் ராய்டு பெரியது – 1 | |
| நாய் பிடிக்கும் வாகனம் – 1 | |

நாள் ஒன்றுக்கு 70 டன் எடையுள்ள குப்பை மட்டும் சேகரிக்கப்பட்டு உரக்கிடங்கிற்கு கொண்டு செல்லப்படுகிறது.

**கொசு ஒழிப்பு 2022 –2023 :-**

தேசிய கொசு ஒழிப்பு திட்டத்தின் கீழ் பணியாளர்கள் செய்கிறார்கள். இத்திட்டத்திற்கு 500 லிட்டர் பைரத்திரம் , 250 லிட்டர் மாலத்தியான் மற்றும் 500 லிட்டர் அபேட் மருந்து சென்ற ஆண்டு கொள்முதல் செய்யப்பட்டு 2022 –2023 ஆண்டிற்கு பயன்படுத்தப்பட்டது. இந்நகரை மூன்று பகுதியாக பிரித்து ஒரு பிரிவை நகராட்சி பணியார்களுக்கும், இரண்டு பிரிவு பணியார்களும் கவனித்து வருகிறார்கள். அரசு அங்கீகராம் பெற்ற விற்பனை நிலையத்தில் ஆக்டலிக் மருந்து வாங்கி சாக்கடைகளிலும் தண்ணீர் தேக்கங்களிலும் வளர்ந்த கொசு மற்றும் புழுக்களை அழிக்க தெளிக்கப்படுகிறது.

இந்நகராட்சி பொது சுகாதாரப்பிரிவில் இயங்கும் யானைக்கால் நோய் கொசு ஒழிப்புத்திட்டத்தில் நகராட்சிப்பகுதியில் 42 வார்டுகளில் தீவிர கொசு ஒழிப்பு பணி நடைபெற்று வருகிறது. இப்பணிக்கு புதுக்கோட்டை இராஜகோபாலபுரம் பகுதியில் அமைந்துள்ள ஜீவன்

சமய கல்வி மன்றம் அறக்கட்டளை மூலமாக புகைப்பான் **1** இயந்திரம் ரூ. **3,72,500./–** மதிப்பீட்டில் நன்கொடையாக வழங்கப்பட்டுள்ளது. கொசு புகைப்பான் **2** மற்றும் **10** கைப்புகையான் நகராட்சி மூலம் வழங்கப்பட்டது. இவ் இயந்திரத்தில் டெக்னிக்கல் மாலத்தியான் என்னும் கொசு ஒழிப்பு மருத்து மழைக்காலங்களில் பரவும் சிக்குன் குன்யா, டெங்கு போன்ற நோய் தடுப்பு நடவடிக்கை

நகராட்சி பணியாளர்களால் போர்க்கால அடிப்படையில் செயல்பட்டுவருகிறது. இப்பணியின் வாயிலாகவும் நகரில் கொசு ஒழிக்கப்பட்டு வருகிறது. மழைக்காலங்களில் ஏடிஸ் லார்வா ஒழிப்பிற்கு அபேட் கலவை தொடர்ந்து ஊற்றப்பட்டு வருகிறது. இப்பணியின் டெங்கு நோய் தடுப்பு நடவடிக்கை **60** பணியாளர்கள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

**2000–**ம் ஆண்டு திடக்கழிவு மேலாண்மை **(**கையாளுதல்**)** மேலாண்மை MSW (H) விதி **159–**ன்படி இந்நகராட்சியில் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் வீடுவீடாக சென்று துப்புரவு பணியாளர் குப்பை அகற்றும் தள்ளுவண்டிகள் மூலம் திடக்கழிவுகள் தன்மை மற்றும் மக்கும் மற்றும் மக்காத தன்மை என இருவகையாக பிரித்து வாங்கப்பட்டு கலவை உரக்கிடங்கிற்கு கொண்டு செல்லப்படுகிறது.

மேற்காணும் திட்டப்பணிக்கு நிறுவனங்கள் குப்பை அகற்ற பேட்டரி மூலம் இயங்கும் வாகனம் மற்றும் இலகு ரக வாகனங்கள் மூலமாக திடக்கழிவுகளை பிரித்து வாங்கப்பட்டு கலவை உரக்கிடங்கிற்கு கொண்டு செல்லப்படுகிறது.

### இடுகாடு, சுடுகாடு :-

நகராட்சிக்குச் சொந்தமான சுடுகாடு மற்றும் இடுகாடுகளை நகராட்சியினரால் நல்லமுறையில் பராமரிக்கப்பட்டு வருகிறது. முகம்மதியார்கள், கிறிஸ்துவர்கள் இடுகாடுகள் அவரவர்களாலேயே நன்கு பராமரிக்கப்பட்டு வருகிறது. மேலும் போஸ் நகரில் செயல்படும் நவீன எரிவாயு தகன மேடை அனைத்து பொது மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டுவரப்பட்டுள்ளது. அதன் மூலம் சென்ற ஆண்டு பிரேதங்கள் எரியூட்டப்பட்டுள்ளது.

### அச்ச, அருவருக்கத்தக்க தொழில்கள் மற்றும் உணவு கலப்பட உரிமையாணைக் கட்டணம்

2022–2023 ம் நிதியாண்டில் மொத்தம் இனங்களுக்கு கட்டணம் வசூல் செய்யப்பட்டு வருகிறது. அறிக்கையாண்டில் வசூல் ரூ. 7,26,075/–.

### உணவு கலப்படம் :-

துணை இயக்நர், சுகாதாரப்பணிகள் புதுக்கோட்டை அவர்களது அலுவலகம் மூலம் உணவு மாதிரி கலப்படம் செயல்பட்டுவருகிறது.

**கீழ்கண்ட முக்கிய விழாக்கள் நடைபெற்றன :-**

| வ. எண் | விழாவின் பெயர் | நடைபெற்ற இடம் | சுமாராக மக்கள் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1. | மாரியம்மன் கோவில் திருவிழா | திருவப்பூர் | 7,14,211 |

சிறப்பு விழாக்கள் ஏதுவும் நடைபெறவில்லை. விழாக்களுக்கு வேண்டிய துப்புரவு பணிகளும், குடிநீர் வழங்குதலும், விளக்குகள் அமைத்தலும், தற்காலிகமாக மல அறைகள் அமைக்கப்பட்டும், போதிய வசதிகளும் செய்து கொடுக்கப்பட்டது.

**குடும்ப நலத்திட்டம் ( அவுட்ரீச் சர்வீஸ் ) திட்டம் :-**

சுகாதாரம் மற்றும் நலத்துறை அரசாணை எண்.764, நாள். 31.03.1988 ன் படி இந்திய மக்கள் தொகைத்திட்டம் 5 இந்நகராட்சியில் அரசாணை எண்.1046, நாள்.23.07.1993 ன்படி இந்திய மக்கள் தொகைத்திட்டம் 5 இந்நகராட்சியில் அமுல்படுத்தப்பட்டு 2 நகர் நல மையம் நடைபெற்று வருகின்றன. இத்திட்டத்தில் 2 நகர் நல மையங்கள் காமராஜபுரம் மற்றும் கோவில்பட்டி ஆகிய பகுதிகளில் அரசாணையின்படி அனுமதிக்கப்பட்ட பணியாளர்கள் மொத்தம் 20, இதில் 2 மருத்துவ அலுவலர்கள் பணியிடமும், 12 பல்நோக்கு சுகாதார பணியாளர்கள் பணியிடமும் காலியாக உள்ளது.

மேற்படி குடும்ப நலத்திட்டத்தை செயல்படுத்திட தொடரும் அரசாணை உத்தரவில் 01.04.2001 முதல் மொத்த செலவினத்தில் மூன்றில் இரண்டு பங்குத்தொகை அரசிடமிருந்து ஒரு பங்குத் தொகை நகராட்சி பொது நிதியிலிருந்து செலவு செய்யப்பட வேண்டுமென தெரிவிக்கப்பட்டுள்ளது. குடும்ப நலத்திட்ட பணியாளர்களும் மாதம் ஒன்றுக்கு சராசரியாக ரூ. சம்பளமாக வழங்கப்படுகிறது. மேற்படி இந்திய மக்கள் தொகைத்திட்டம் 5–ல் இரு நகர் நல மையங்களில் மாதம் ஒன்றுக்கு சராசரியாக 618 வெளி நோயாளிகளுக்கு சிகிச்சை அளிக்கப்பட்டு மருந்துகள் வழங்கப்பட்டு வருகின்றன.

இந்நகராட்சி பொது சுகாதார பிரிவு மருத்துவ பணியாளர்களால் டெங்கு நோயாளிகளான 127 நபர்களுக்கும், கொரோனா தொற்றால் பாதிக்கப்பட்ட நோயாளிகள் 3160 நபர்கள் கண்டறியப்பட்டுள்ளது. அவர்கள் அனைவருக்கும் அரசு ஆரம்ப சுகாதார நிலையங்களிலும் அரசு மருத்துவமனை வாயிலாகவும் சிசிச்சை பெறப்பட்டு நல்ல முறையில் உள்ளனர்.

**குடிநீர் விநியோகம் :-**

புதுக்கோட்டை நகரத்தின் பரப்பளவு 21.95 சதுர கிலோ மீட்டர், 2011 மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி மக்கள் தொகை 143748 ஆகும். தற்போது பழுதுகள் உடனுக்குடன் சீர்செய்யப்பட்டு நல்லமுறையில் இயங்கி வருகிறது. 31.03.2022 வரை புதிய குடிநீர் இணைப்புகள் வழங்கப்பட்டுள்ளன. மேலும் இந்நகரில் 575 பொதுக்குடிநீர் குழாய்கள் உள்ளன.

**குடிநீர் விநியோகம் பற்றிய விபரங்கள் :–**

| வ. எண் | மேல்நிலை நீர்தேக்க தொட்டிகள் விபரம் | கொள்ளவு விபரம் இலட்சத்தில் |
|---|---|---|
